[2007 ஏப்ரல் 24

வைத்து மட்டுமே இதை நாம் நிறைவேற்றிவிட முடியாது. அதனால்தான் நேரடியாக அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பித்து, அவர்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் அந்த நான்கு கடைகளைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்த நான்கு கடைகளைப் பற்றிய விவரங்களை என்னிடத்தில் குறித்துக் கொடுத்தால் உடனே மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்புகொண்டு, அவை அங்கு வருவதற்கு வேண்டிய முயற்சி செய்யப்படும். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

127—

இணையதள வசதி

***994அ—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலைவாய்ப்புப் பதிவை இணையதளம்மூலம் செய்யும் வசதியை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு ஏதும் இருக்கக் கூடாது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர், சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைவாய்ப்புக் கோரிப் பதிவு செய்துள்ளவர்கள் மேற்படி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள இணையதளத்தின்மூலமாக தங்களின் பதிவினைப் புதுப்பித்து வருகின்றார்கள். *(குறுக்கீடுகள்)*

2007 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: இருப்பினும், தமிழகத்திலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களையும் மத்திய அரசின் மின் ஆளுமைத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இன்டர்நெட் மூலம் பதிவினை மேற்கொள்வதற்கான வசதியினை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: Speaker Sir. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஒன்றும் குற்றச்சாட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடு) இருங்கள் சொல்கிறேன். 39 இலட்சம் Ration Card-கள் வழங்கப்பட்டதில் 15 இலட்சம் Ration Card-கள் Bogus cards என்றும் அதைக் கண்டுபிடித்துள்ளோம் என்றுதான் சொல்கிறார். அதில் என்ன குற்றச்சாட்டு இருக்கிறது? அது உண்மைதானே? அது குற்றச்சாட்டு கிடையாதே? உண்மையை சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? வழங்கப்பட்ட 39 இலட்சம் Ration Card-களில் 15 இலட்சம் cards bogus cards. அதைத்தான் கண்டுபிடித்திருக்கிறோம் என்று சொல்கிறார். அதில் என்ன தவறு? It is a fact. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது, நடைபெற்றது. உண்மையான குறிப்புகளில் இருந்து, 39 இலட்சம் Ration Card-களில் 15 இலட்சம் Bogus card-கள் கொடுக்கப்பட்டன என்று சொல்கிறார். அதைத்தான் சொல்லியிருக்கிறார். அவர் ஒன்றும் குற்றச்சாட்டுச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணினிமூலம் ஒவ்வொரு வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் மேற்கொள்ளப்படும் பணிகள் யாவை என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு இல்லை. உட்காருங்கள். உண்மையை, கண்டறிந்ததைத்தான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) அதில் ஒன்றும் குற்றச்சாட்டு இல்லை. (குறுக்கீடுகள்) திரு. பிச்சாண்டி. (குறுக்கீடுகள்) அதில் குற்றச்சாட்டு இல்லை. உட்காருங்கள்.

HON. THIRU V.P. DURAISAMY (DEPUTY SPEAKER): Sir, Question Hour-ல் இந்த மாதிரி செய்யக் கூடாது. After Question Hour, they have got right to say anything. They have no business at all to disturb the Question Hour-Question Hour-ல் இதையெல்லாம் பேசக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணினிமூலம் அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்படும் பணிகள் யாவை என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணினிமூலம் பதிவு செய்தல்... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 39 இலட்சம் Ration Card-களில் 15 இலட்சம் bogus card-கள் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையைக் கண்டறியும் நிலையே தவிர, குற்றச்சாட்டு இல்லை.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: பதிவுதாரர்களின் கூடுதல் கல்வித் தகுதியைப் பதிவு செய்தல், வேலை அளிப்பவர்களுக்கு அரசு விதிமுறைப்படி பட்டியல் அனுப்புதல், வேலை நிலவரத் தகவல் ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பணி ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.